செ.வெ.எண்.17 நாள்.11.01.2018

**காஞ்சிபுரம் மாவட்டம்**

**நாவலூரில் இயற்கை சீற்றத்தால் மறுகுடிமர்த்தப்பட்டவர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று வேலைவாய்ப்பு பெற்றவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.**

*************

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், செரப்பணஞ்சேரி ஊராட்சியில் நாவலூரில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நீர்நிலை புறம்போக்கு ஆக்கிரமிப்புகளிலிருந்து மறு குடியமர்த்தப்பட்டவர்கள் மற்றும் சென்னை கூவம் ஆற்றின் கையோர ஆக்கிரமிப்புகளிலிருந்து மறுகுடியமர்த்தப்பட்டவர்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மாவட்ட நிர்வாகத்தால் நிறைவேற்றித்தரப்பட்டுள்ளது. தற்போது அங்கு குடியிருப்பவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையிலும் அங்குள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நடத்தப்பட்டது.

இம்முகாமில் வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயற்சி அளிக்கும் நிறுவனங்கள்

1. எவர்கிரின் செக்யூரிட்டி
2. அப்பல்லோ பார்மஸி
3. மெர் பீடாகாதி
4. டிவிஎஸ் டிரெயினிங் சர்வீஸ்,
5. பாஸ் பப்ளிகேஷன்ஸ்,
6. யுரேகா போர்ப்ஸ்,
7. ஏடிடிசி டிரெயினிங்
8. G4S செக்யூரிட்டி சர்வீஸ்
9. சேவாலாயா
10. பிரிட்டானியா பிஸ்கட்
11. டாடா டிரெயினிங் சர்வீஸ்

ஆகிய தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் பங்கேற்றன.

இம்முகாமில் பங்கேற்று பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நாவலூரில் குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றவும், பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்கள் இப்பகுதியில் தொடர்ந்து நடத்தப்படும். இங்கு வசிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் மாவட்ட நிர்வாகத்தால் செய்து தரப்பட்டுள்ளன. இருப்பினும் மக்கள், பேருந்து வசதி, தெருவிளக்கு வசதி, குடும்ப அட்டைகள் உள்ளிட்ட

கோரிக்கைகளை பொதுமக்கள் தெரிவித்தனர். தேவைகள் பட்டியலிடப்பட்டு அவற்றின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு உடனடி தீர்வு காணப்படும். இங்கு சென்னை கூவம் ஆற்றின் கரையோரம் வசித்த 805 குடும்பங்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த 900 குடும்பங்களும் ஏற்கனவே குடியிருப்பவர்கள் 35 குடும்பங்களும் ஆக கூடுதலாக 1740 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு வசித்து வருபவர்களில் எஸ்.எஸ்.எல்.சி கல்வித் தகுதி கீழ் 726 பேரும் 10ம் வகுப்பு படித்தவர்கள் 169 பேரும், 12ம் வகுப்பு படித்தவர்கள் 76 பேரும், பட்டதாரிகள் 110 பேரும் , டிப்ளமா படித்தவர்கள் 22 பேரும், ஐடிஐ படித்தவர்கள் 19 பேரும், இன்ஜீனிரியங் பட்டதாரிகள் 11 பேரும், ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் 15 பேரும், மருத்துவம் சார்ந்த படிப்பு படித்தவர்கள் 12 பேரும் என 1160 பேர் கல்வி பயின்றவர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு முதற்கட்டமாக இந்த வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டுள்ளது. இவர்கள் மேலும் பயன்பெறும் வகையிலும் இப்பகுதிக்கு அருகாமையிலுள்ள ஒரகடத்திலுள்ள பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்கும் வகையிலும் இங்குள்ள கட்டுமான தொழிலாளர்கள் பயன்பெறும் வகையிலும், தனியார் நிறுவனங்கள் பங்குபெறும் வகையில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும். இப்பகுதியில் தற்போது 37 மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன அவர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து தொழில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இம்முகாமில் வேலைவாய்ப்பு பெற்றவர்களுக்கு ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். இம்முகாமில் 700 பேர் பங்கேற்றனர். திறன்பயிற்சி பெறுவதற்கு 90 பேர் தேர்தெடுக்கப்பட்டனர். 167 பேருக்கு வேலைவாய்ப்பு ஆணை வழங்கப்பட்டது.

இம்முகாமில் காஞ்சிபுரம் கோட்டாட்சியர் திரு.ராஜீ, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக துணை இயக்குநர் திரு.ஆர்.அருணகிரி, குடிசை மாற்று வாரிய செயற்பொறியாளர் திருமதி. பி.மாலா, சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு.கே.முத்தையா பிள்ளை ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.